**இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையர் அவர்களின்**
**செயல்முறை ஆணை, சென்னை – 106**

**முன்னிலை – திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,**

ந.க.எண். 7285/அந3/2025 நாள். 02.07.2025

பொருள் அலுவலக நடைமுறை – இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையரகம், சென்னை – 106 – திரு.அ.தளவாய் மாடசாமி, மருத்துவமனை பணியாளர்(சித்தா), அரசு ஆரம்ப சுகாதார நிலையம், முனைஞ்சிப்பட்டி, திருநெல்வேலி மாவட்டம் – தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் விதிகள் 3(g) அடிப்படையில் பதவி உயர்வில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் – பணி வரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை
1. இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் அவர்களின் பணியிட ஆணை ந.க.எண்.26952/நி2/2/2023, நாள்.15.03.2024.
2. தனியரது 25.03.2024 நாளிட்ட பணியில் இணைந்த விண்ணப்பம்

-------

**ஆணை**

பார்வை 1 ல் கண்டுள்ள இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் அவர்களின் பணியிட ஆணையின்படி அரசு ஆரம்ப சுகாதார நிலையம், முனைஞ்சிப்பட்டி, திருநெல்வேலி மாவட்டத்தில் மருத்துவமனை பணியாளராகப் (சித்தா) பணிபுரிந்த திரு.அ.தளவாய் மாடசாமி என்பவர் 2023–2024 – க்கான தேர்வு பட்டியலின்படி 3(g) அடிப்படையில் பதவி உயர்வில் இளநிலை உதவியாளராக இவ்வாணையரகத்தில் 25.03.2024 முற்பகல் பணியில் இணைந்தார். தனியர் மீது இத்துறை அளவில் எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை.

திரு.அ.தளவாய் மாடசாமி, இளநிலை உதவியாளர் அப்பதவிக்கான அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ளதால் தனியர் பணியில் சேர்ந்த நாளான 25.03.2024 முற்பகல் முதல் தனியரது தற்காலிகப்பணி வரன்முறை செய்யப்பட்டு தகுதிகாண் பருவத்தில் அமர்த்தப்படுகிறார்.

மேலும் நடைமுறையிலுள்ள பணி விதிகளின்படி இளநிலை உதவியாளரான திரு.அ.தளவாய் மாடசாமி அவர்கள் தகுதிகாண் பருவமான இரண்டு வருட காலத்தைத் தொடர்ந்து மூன்று வருட பணிக்காலத்திற்குள் முடித்திடவும், மேலும் அக்கால அளவிற்குள் அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்பெறும் பவானி சாகர் அடிப்படை பயிற்சி நிறைவு செய்திடவும் மற்றும் தமிழ்நாடு மருத்துவ விதித் தொகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

மு.விஜயலட்சுமி
இந்திய மருத்துவம் மற்றும்
ஓமியோபதி ஆணையர்

பெறுநர்

1. திரு.அ.தளவாய் மாடசாமி,
இளநிலை உதவியாளர்,
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி
ஆணையரகம், சென்னை – 106.

நகல்

1. இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், சென்னை – 106.
2. நிர்வாகம் – 2 பிரிவு
3. தனியரின் பணிப்பதிவேடு
4. முக்கிய ஆணைத்தொகுப்பு

// உண்மை நகல் // அனுப்பப்படுகிறது //

உதவி இயக்குநர்

MP : 03.07